ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

भवति भुवनसौख्यं हेतुना केन चाद्य-
त्यविदितदृढमूलाः जातिसांकर्यमुख्यम् ।
निगमपथविरुद्धं साधु संगर्हितं यत्
तदिह वहु निदानं पापदं केचिदाहुः ॥

தற்காலம் நம் தேசத்திற் கேற்பட்டிருக்கும் கஷ்டங்களை விலக்கி விசேஷ ஸுகத்தை யடைவதற்கு யாது காரணமென்று உண்மையான தத்வத்தை யறியாதவர்களாய்க் கொண்டு அநாதியான வேதங்களுக்கு விருத்தமாயும் அவ்வேதங்களிற் கூறியவாறு அனுஷ்டிக்கும் மஹான்களால் நன்கு நிந்திக்கத்தகுந்ததும் அதிக பாபத்தைக்கொடுக்கக் கூடியதுமான ஜாதிஸாங்கர்யம்முதலான சம்பந்தமில்லாத அநேக காரணங்களை சிலர் செப்புகின்றார்கள். அந்தோ!

தமக்கேற்பட்ட துன்பத்தை விலக்கமுயலும் அறிஞர்கள் முதலில் இத்துன்பம் உண்டானதற்கு எது காரணமென்று நன்காலோசித்து, தமக்கேதாகிலுமொன்று தோன்றுமாகில் இக்காரணம் சரிதானா? என்று நன்றாய் பரீக்ஷைசெய்து பிறகு அதைத் தீர்மானிக்கவேண்டும். அவ்விதமின்றி காரணமில்லாததைக் காரணமாகக்கருதி படும்பிரயாசையால் பயனுண்டாகா என்று நிச்சயம். இப்பொழுது நம்மிந்தியாவிற்குண்டாயிருக்கும் கஷ்டத்திற்கு எது காரணமென்றறிந்து அதை விலக்க வேண்டியது முக்கியமாயிருப்பினும், இக்காரணத்தை இன்னதென்று நன்கறியாமல் ஜாதிவேற்றுமை, தீண்டாமை, தீபாந்திரம் போகாமலிருப்பது முதலியவைகள்தானென்று கருதி, லோகக்ஷேமத்தை முக்கியமாய்க்கொண்டு பகவானால் வெளியிடப்பட்ட வேதங்களின் அபிப்பிராயத்திற்கு மாறுதலாகவும், சிஷ்டாசார விருத்தமாயும் பெரும்பாபகரமாயுமான ஜாதிவேற்றுமையையொழிப்பது தீண்டாமையைவிலக்குவது தீபாந்திரம் செல்வது முதலியவைகளே நம் க்ஷேமகாரணமென்று சிலர் பறையறைகின்றார்கள். முன்பு உலகக்ஷேமத்திற்கு காரணமான இவைகளே தற்காலம் உலகத்தின் கஷ்டத்திற்கு காரணமென கூறுவது கலியினோர் விலாஸமே.

ஆர்யதர்மம்.

துந்துபி-ஸு தை-மீ உகூல

தீண்டாமையைப் பற்றிய வினு விடைகள்.

இனி ௩-வது கேள்வியை கவனிப்போம். இவ்விதம் ஒரு ஜாதி இருப்பதாயின் அவர்கள் ஏன் நம் அருகில் நெருங்கக் கூடாது என்பது.

அசுத்தி என்பது இருவகை. ஒன்று பிரத்தியக்ஷத்தாலறியக்கூடியது. மற்றொன்று சாஸ்திரங்களின் வாயிலாகவே தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு மனிதனுக்கு சேறு முதலிய துர்நாற்றமுள்ள பதார்த்தங்கள் சரீரத்தில் சம்பந்தப்பட்டால் அவனுக்கும், அவனைப் பார்ப்போர்களுக்கும் அசுத்தமாகத் தோன்றி உடனே ஸோபு முதலியவைகளால் தேய்த்து, ஜலத்தால் நன்கு சுத்தம் பண்ணின பிறகே, மனதிற்கு திருப்தி ஏற்படுகின்றது. இது மாத்திரமல்ல, நம்மால் வளர்க்கப்படும் மாடு முதலான மிருகங்களையும் அசுத்தியில்லாமலிருக்கவேண்டி, ஒவ்வொரு தினமும் சுத்தம்பண்ணும்படி செய்கிறோம். இந்த மாதிரி ஏற்படும் அசுத்தியும், அதை விலக்கவேண்டி நாம் செய்யும் பிரயத்தினமும், அவரவர்களுக்கும் நன்றாய் அனுபவத்தில் தெரிந்தவிஷயமே. இதுபோல் இரண்டாவதான அசுத்தியையும், அதினுலேற்படும் தோஷத்தையும், அது விலகியதாலுண்டாகும் சுத்தியையும், அதற்குள்ள பயனையும், எல்லோராலும் ப்ரத்தியக்ஷத்தில் சுலபமாயறியமுடியாது சாஸ்திரங்களைக்கொண்டுதான் தீர்மானிக்கவேண்டும். அதாவது ஒரு குடும்பத்தில் யாராவதொருவரிறந்தால் அவரைச்சேர்ந்த ஞாதிகளுக்கு கொஞ்ச

காலம் அசுத்தியுண்டென்றும் அவர்களுடன் ஸ்பரிசிப்பது, சேர்ந்துண்பது முதலிய சில காரியங்கள் கூடாதென்று கூறும் சாஸ்திரங்களின் கருத்திற்கிணங்கவே, உலகில் பெரும்பாலும் இந்துக்களில் நடைபெற்று வருகிறதென்பது பிரசித்தமே. இவ்விதம் அசுத்தியடைந்தவர்களைப் பார்ப்போர்களும் பிரத்தியக்ஷத்தில் நன்கு தெரியாதபடியால் நாங்களதை அங்கீகரிக்க மாட்டோமென்று இந்துக்களில் தைரியமாய் முன்வந்துசொல்ல இன்னும் ஒருவரும் துணியவில்லை. பின்னும், தெய்வமாக நினைத்து உபாஸிக்கவேண்டுமென்று சொல்லப்பட்ட மாதாவைக்கூட சிலகாலங்களில் வெளியிலிருக்க வேண்டுமென்றும், நம்மைக்கண்டால் 30, 40 அடிதூரம் விலகியே இருக்கவேண்டுமென்றும் கூறும் சாஸ்திரங்களைப் பிரமாணமாக நம்பி அவ்விதமே அனுஷ்டானத்திலும் நடத்திக்கொண்டு வருகிறோம். இவ்விதமே பிதாவையும், அவருக்கு ஆசௌசம் நேருங்கால் சேர்ந்துண்பது, ஒரே ஆஸனத்திலிருப்பது, ஸ்பர்சம் முதலான காரியங்களிலிருந்தும் அவரை விலக்கிவிடுகிறோம். எக்காரணத்தாலும் நாம் வித்தியாசம் பாராட்டாமல், தெய்வமாக உபாஸிக்க வேண்டிய தாய் தந்தைகளைக்கூட சாஸ்திரார்த்தங்களை நம்பி சிற்சில காரியங்களில் வேற்றுமை பாராட்டும்பொழுது, இதரர்களிடங்களில் சில காரியங்களில் வித்தியாசத்தை யனுஷ்டிக்க வேண்டுமென்று நம் சாஸ்திரங்கள் வற்புறுத்தும் பொழுது, அதை எப்படி விடமுடியும். ஆனால் தீண்டாதவர்களென்று சிலரை விலக்குவது கட்டுப்பாடேயன்றி, சாஸ்திரப்பிரமாணமில்லையெனச் சிலருக்கு சங்கை யுண்டாகலாம். அது சரியல்ல. कलौ पाराशरः स्मृतः என்று ஸ்மிருதிகளுக்குள் கலியுகத்தில் முக்கியமாய் அங்கீகரிக்கப்பட்ட பராசர ஸ்மிருதியில்

चण्डालादीनां व्यवधाने देशपरिमाणमाह पराशरः —

युगं युगद्वयं चैव त्रियुगं च चतुर्युगम् ।

चण्डालसूतिकोदक्यापतितानामधः क्रमात् ।

ततः सन्निधिमात्रेण सचेलस्नानमाचरेत् ।
स्नात्वालोकयेत्सूर्यं ....
अधःक्रमात् — विपरीतक्रमादित्यर्थः ॥

சண்டாளன், பிரஸவித்தவள், வீட்டுக்காகாதவள், பதிதன் இவர்களையே முறையே சண்டாளனுக்கு நான்கு யுகமும், பிரஸவித்தவளுக்கு மூன்று யுகமும், வீட்டுக்காகாதவளுக்கு இரண்டு யுகமும், பதிதனுக்கு ஒரு யுகமும் விலக வேண்டும். இவ்விதமின்றி ஸமீபத்தில் சென்றால் ஸ்நானம் செய்து சூர்யனையும் பார்க்கவேண்டும்.

யுகமென்றால்,

नवपदं रथयुगं अष्टपदमनोयुगमिति लौकिकाः

என்கிற வைத்தியநாததீக்ஷிதர் வசனப்படி 9 அடி என்றும், 8 அடி என்றும் லோகவியவகாரமேற்பட்டிருக்கிறது. இதினால் கீழ் குறிப்பிட்ட நான்குபேர்களுக்கும் கிரமமாய் 32, 24, 16, 8 அடிகளுக்குக் குறையாமல் விலகவேண்டும் என்று ஏற்படுகின்றது. மற்றொரு ஸ்மிருதியிலும்,

चण्डालस्य चतुष्षष्टिपदं श्रेण्याः शतद्वयम् ।
द्वात्रिंशदथवा तस्य ॥

சண்டாளனுக்கு 64 அடி விலகவேண்டும், 32 அடிக்குக் குறையக் கூடாது. அவன் தெருவாயிருந்தால் 200 அடி விலகவேண்டும் என்று கூறுகின்றார்.

இக்கருத்தையே,

सूतिकापतितोदक्याः चण्डाळश्च चतुर्थकः ।
यथाक्रमं परिहरेदेकद्वित्रिचतुर्युगम् ॥

என்றும், சண்டாளன் பதிதன் முதலானவர்களுடைய நிழல் ஸ்பர்சமேற்பட்டாலும், ஸ்நானம் செய்யவேண்டுமென்றும்,

यस्तु छायां श्वपाकस्य ब्राह्मणो ह्यधिरोहति ।
तत्र स्नानं प्रकुर्वीत घृतं प्राश्य विशुद्ध्यति ॥

என்று வியாஸர் கூறுகின்றார்.

चण्डालपतितच्छायां स्पृष्ट्वा स्नानं समाचरेत् ।

என்று ஸ்மிருதி ரத்னக்காரருமபிப்பிராயப் படுகிறார். இந்த விஷயத்தில் இவைபோன்ற பிரமாணவசனங்கள் இன்னும் பல உண்டு. இவ்வாறு ஸ்பஷ்டமாய் அறிவிக்கும் சாஸ்திரங்களை கவனித்தால் ஆசௌசம் முதலான சில நிமித்தங்களைக் கொண்டு எவர்களாயிருந்தாலும் சிலகாலம் விலகவேண்டுமென்றும், பிறப்பாலேற்பட்ட ஜாதி பேதத்தைக்கொண்டு எப்பொழுதும் சிலர் விலகியே இருக்கவேண்டுமென்றும் ஏற்படுகின்றது. அதில், சண்டாளர் என்று வழங்கப்படும், தீண்டாதவர்கள் ஜாதியாலேயே விலகியிருக்க வேண்டியவர்களே. தவிர, தொழிலாலும் ஆகாரத்தாலும் ஏற்பட்ட தோஷத்தால் விலகவேண்டியவர்களென்று கூறவில்லை. இந்த சாஸ்திரங்களைப் பிரமாணமாய் நம்பித்தான் அறிஞர்களான நம் முன்னோர்களும், தம் தாய்தந்தைகளைக்கூட சில சமயங்களில் விலக்கிவிட்டு தம் வைதிக கர்மாக்களை அனுஷ்டித்துவந்து அவ்விதமே நடைபெறும்படி செய்திருப்பதுபோல் சண்டாளர் என்கிற ஓர் வகுப்பினரையும் அந்த ஜாதியில் பிறந்த காரணத்தைக்கொண்டு விலக்கவேண்டுமென்கிற சாஸ்திரங்களின் கருத்தைக் கொண்டு மாத்திரம் அனாதிகாலந்தொடங்கி அதையும் அனுஷ்டானத்தில் கொண்டு வந்திருக்கிறார்களேயன்றி வேறு மாறுதலான எண்ணத்தாலோ பக்ஷபாதத்தினாலோ இல்லை என்று நிச்சயமாய் சொல்லலாம். இவர்களைப்போல் பிரதிலோமஜாதிகளில் பலவிருப்பினும் அவர்களைவிட்டு, இவர்களிடம் மாத்திரம் இவ்விதம் சொல்லுவதற்கு

யாது காரணமென்று கொஞ்சம் அவசரப்படாமல் ஆலோசித்துப் பார்த்தால் சாஸ்திரங்களின் கருத்தை அனுஷ்டிக்கிறார்களென்பதைத் தவிர வேறு யாதொரு தோஷமும் சொல்ல, அற்பமேனுமிடமில்லை. இதுவரையில் கூறிய பிரமாண வசனங்களால் மூன்றாவது, நான்காவது வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டன.

இந்தத் தீண்டாமையால் நம் தேசக்ஷேமத்திற்கு மிகவும் குறைவேற்படுகிறதென்றும், ஒற்றுமையில்லாமல் பலவாறான கஷ்டங்களை அனுபவிக்கும்படி நேருகிறதென்றும், சிறந்த கல்விமான்களும் கருதுகிறார்கள். ஆனால் நம்தேசத்திற்கு தற்காலம் அநேகவித கஷ்டங்கள் நேர்ந்திருப்பதுண்மையே. இதினால்தான் அவை ஏற்பட்டிருக்கின்றனவென்றும் இதை விலக்கிவிட்டால் சகல கஷ்டங்களும் நிவர்த்தியாய் ஸ்வராஜ்ய சித்தி பெற்று மிகவும் க்ஷேமத்தை யடைவார்களென்பதும், எங்ஙனம் பொருந்தும். நம் தேசத்திற்கு க்ஷேமக்குறைவு அனாதிகாலமாக ஏற்பட்டிருக்கிறதா? அல்லது சொற்பகாலமாகவா? அனாதிகாலமாகவென்று சொல்வது பொருந்தாது. முற்காலங்களில் தேசமெங்கும் க்ஷேமக்குறைவின்றி நன்றாயிருந்ததாக நாம் நேரில் பாராவிடினும் புராணம் முதலிய கிரந்தங்களால் நன்கு வெளியாகிறது. இப்பொழுதுதான் சொற்பகாலமாக விருக்கிறதென்றால், சுமார் 100 வருஷமாயிருப்பதாக வைத்துக்கொள்வோம். நம் தேசத்தின் முன்னேற்றத்திற்கு இடையூறாயிருக்கும் இந்தத் தீண்டாமை ஏற்பட்டு எவ்வளவுகாலமாயிருக்குமென்று யாராலாகிலும் தீர்மானிக்க முடியுமா? ஸ்மிருதி கர்த்தாக்களான பராசரர் வியாஸர் முதலான மஹரிஷிகளால் ஸ்மிருதிகளில் இதைப்பற்றிக் கூறப்பட்டிருப்பதால் அக்காலத்திலுமிருந்ததாக நிச்சயமாய் தெரிகின்றது. இதுவுமன்றி உபநிடதங்களிலும் குரூரமான பாபகர்மாக்களை அதிகம் செய்தவர்கள், சண்டாளயோனியை அடைகிறார்களென்று கூறப்பட்டிருப்ப

தால், சண்டாளனென்று ஒரு ஜாதி யுண்டு என்றும் அதிக
பாபங்களைச் செய்தவர்களுக்கு அதில் ஜன்மா ஏற்படுகிறதென்
றும் தெரிகின்றது. தற்காலத்திலுண்டாயிருக்கும் தேசக்ஷே
மக்குறைவிற்கு இதுவே காரணமென்பது உண்மையாயிருக்கு
மாகில் இது ஏற்பட்டகாலம் முதல் இக்குறைவு இருந்தே தீர
வேண்டும். அப்படியிருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் முன்
காலங்களிலிதினால் பாதகமில்லாமலிருந்தாலும் தற்சமயம் இதி
னால்தான் பாதகமென்று சொல்வதும் சரியல்ல. கற்கண்டு
இதுவரையில் தித்திப்பாயிருந்தது, இப்பொழுது கொஞ்சகால
மாய் கசப்பாயிருக்கிறதென்றால் அது கற்கண்டின் தோஷமா?
அல்லது சாப்பிடும் மனிதனுக்கு நாக்கில் தோஷமிருக்கா?
என்று யோசித்தால் புருஷதோஷத்தைத்தவிர கற்கண்டில்
எப்படி தோஷம் கற்பிக்கமுடியாதோ அப்படியே நம் தேச
க்ஷேமத்தின் பொருட்டு ஏற்பட்ட ஆசாரம் வெகுகாலமாய்
க்ஷேமத்தைக் கொடுத்தும் தற்காலம் கஷ்டத்திற்கு காரண
மாகிறதென்றால் காமாலைக் கண்ணனுக்கு சங்கு மஞ்சள்நிறமாய்
தோன்றுவதுபோலவே யல்லாமல் வேறு சொல்லமுடியாது.
இந்தத் தீண்டாமையை அனுஷ்டிக்காத தேசங்களை கவனித்
தாலும் நம் தேசத்தைக்காட்டிலும் அதிக க்ஷேமத்தை யடைந்
திருப்பதாகவும் தெரியவில்லையே.

தற்காலம் கலியின் அரசாக்ஷியால் நம் ஸனாதனதர்மங்கள்
பலவாறாய் பீடிக்கப்பட்டவைகள்போக ஒதுங்கிநிற்கும் இரண்
டொரு தர்மத்தையும் அடியோடு நாசஞ்செய்து ஆசாரத்தை
விட்டு அனாசாரத்தைப்பூண்டு

अनभ्यासाच्च वेदानामाचारस्य च वर्जनात् ।
आलस्यादन्नदोषाच्च मृत्युर्विप्रान् जिघांसति ॥

என்று மனுகூறியவாறு பிர்மதேவனால் கொடுக்கப்பட்ட ஆயுளை
இழந்து அகாலத்தில் ஜனங்களை மிருத்யுவுக்கு இரையாக்கு

வதைத்தவிர வேறு யாதொருபயனும் உண்டாவதாகத்தோன்றவில்லை. தற்காலத்தில் நம் ஸனாதனதர்மத்தை அடியோடு துலைக்கவேண்டுமென்று கங்கணங்கட்டிக்கொண்டு முன்வந்திருக்கும் பெரியோர்களுடைய மனதில் ஸர்வ ஜகதீசனான பகவான் பிரவேசித்து அவர்கள் புத்தியை ஸன்மார்க்கத்தில் திரும்பும்படி செய்யவேணுமாய் ஸ்ரீ பரமேசுவரனை யெப்பொழுதும் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறோம். சுபம்.

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரின் சரிதம்.

(௬உ-வது பக்கத்தொடர்ச்சி.)

இம்மஹானால் மற்றும் இயற்றப்பட்ட சிவலீலார்ணவ காவ்யத்தின் ஒன்பதாவது ஸர்க்கத்தில், ஹிமாசலத்தினருகில் தடாதகாதேவி (மீனாட்சியின் ஸைன்யங்கள்) தங்கின என்று கூறி, அப்பிரதேசத்தை வர்ணிக்கும்போது, அனுபாஸமாய் வெளிக்கிளம்பின ஸரஸமான ஸரஸ்வதியால், இவர் பிராமணர் என்றும், ஆசாரஸம்பந்நர் என்றும் விபக்தமாகிறது.

रत्नानि तत्र वणिजो भिषजोऽग्रहीषु-
र्दिव्यौषधीर्गजवरानपि राजकीयाः ।
अस्मादृशाः क्षितिसुराः पुनराहरन्त
भागीरथीतटरुहाणि कुशाङ्कुराणि ॥

அப்பிராந்தத்திலுள்ள ரத்தினங்களை வியாபாரிகளும், திவ்விய மூலிகைகளை வைத்தியர்களும், சிறந்த யானைகளை ராஜபடர்க

ளும், கிரஹித்துக்கொண்டார்கள். நம்மைப்போன்ற பிராம ணர்களோவென்றால், கங்கைக்கரையில் முளைத்த குசாங்குரங் களை கிரஹித்துக்கொண்டனர்.

இம்மஹான் ஸ்ரீ கண்டமதத்தின் எல்லா மர்மங்களையும் நன்றாயுணர்ந்தவர். இவருக்கு ஸ்ரீ சைவசித்தாந்தத்தில் மிகுந்த அபினிவேசம். தானேவைராக்யசதகத்தில், शैवा वयमाचतुर्वदनात् பிரும்மாமுதற்கொண்டு நாங்கள் சிவனடியார்கள் என்று கூறி யிருக்கிறார். சாந்தி விலாஸத்திலும்,

> आगर्भादाकुलपरिबृढादाचतुर्वक्त्रतोऽपि
> त्वत्पादाब्जप्रपदनपरान्वेत्सि नश्चन्द्रमौळे ॥

கர்ப்பம் முதற்கொண்டும் பிரும்மன் வரையிலும், உம்முடைய பாதாப்ஜத்தையே சரணமாகப் புகுந்த எங்களை, சந்திர மௌளியே! நீர் அறிகிறீர் என்றும் கூறியிருக்கிறார்.

இம்மஹானுக்கு, எப்படி மிகுந்த கீர்த்தி வாய்ந்ததோ, அப்படி ஸ்ரீமான் அப்பைய தீக்ஷிதரின் புத்திரர்களுக்கும் ஏற் படவில்லை. இம்மஹானுடைய காலத்தில், சாஸ்திரங்களிலோ, ஸாஹித்யத்திலோ, இவருக்குச் சமமாயோ, மேற்பட்டோ உள்ளவர் ஒருவருமில்லை. இவருடைய சமகாலத்திலுள்ளவர் களில், இவரே சிறந்த கவிபாவர். இவருடைய, ஸாஹித்யத் தின் நடையானது, லளிதமான பதச்சேர்க்கையும், விசித்திர மான உல்லேகமும், ரஸம் நிறம்பினதும், தடையில்லாத ஸரஸ் வதியின் பிரவாஹமும் வாய்ந்து, ஆனந்தத்தை யளிக்கக்கூடி யது. இவரது ஸாஹித்யம் சப்த சித்திரங்களிலோ, யமகங் களிலோ, தன் மனதையும், பிறர் மனதையும் புண்ணாக்காமல், பரமானந்தத்தைப் பெருகவிடும்.

ஸ்ரீ ராமபத்ர தீக்ஷிதரவர்கள், சிருங்கார திலகபாணத்தில்,

नीलकण्ठमखिनां सदसि सकृत्प्रविष्टस्यापि समुज्जृम्भते सरसपदसंदर्भवैदग्धी ।

'ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரவர்களின் ஸபையில், ஒரு தடவை பிரவேசித்தவருக்கும் ஸரஸபதங்களின் ஸந்தர்ப்பத்தாலமைந்த வாக்கின் சிறப்பானது பொங்குகிறது' என்று, பிரசித்தமாய்ச் சொல்கிறார். இவரால் இயற்றப்பட்ட சிறு காவ்யங்களாவன. 1 கலிவிடம்பனம், 2 ஸபாரஞ்சனம், 3 அன்யாபதேச சதகம், 4 சாந்திவிலாஸம், 5 வைராக்யசதகம், 6 ஆனந்தசாகரஸ்தவம்,

இவரது மஹாகாவ்யங்களில், ஹாலாஸ்யநாதரின் 64 லீலைகளை வர்ணித்து, பரமேசுவரரின் மேன்மையைச் சிறப்பிக்கும் சிவலீலார்ணவம் ஒன்று. இது 22 ஸர்க்கமுள்ளது. இரண்டாவது கங்காவதரணம், இதுவும் கங்கை பகீரதனால், பூமியில்வந்த வரலாற்றைக் கூறுவதுடன், பரமேசுவரனுடைய பாரம்யத்தைச் சிறப்பிக்கிறது. இது 8 ஸர்க்கமுள்ளது. கத்திய, பத்தியாத்மகமான நீலகண்டவிஜயம் என்ற சம்பூகாவ்யமும் இவரால் இயற்றப்பட்டிருக்கிறது. அதுவும், ஹாலாஹலவிஷத்தை உட்கொண்டு ஸமஸ்த உலகங்களையும், ரக்ஷித்த சிவபெருமானது உத்கர்ஷத்தை அறிவிக்கிறது. நீலகண்ட விஜயத்தைப்போல், மற்ற காவ்யங்களில் இக்கவி, தன் காலத்தைக் குறிப்பிடவில்லை. ஆனாலும், மற்ற காவ்யங்கள், அப்பைய தீக்ஷிதரவர்கள் விண்ணுலகஞ்சென்ற பிறகுதான், ஆக்கப்பட்டிருக்கவேண்டுமென்று தெரிகிறது.

> कालेन शंभुः किल तावतापि
> कलाश्चतुष्षष्टिमिताः प्रणिन्ये ।
> द्वासप्ततिं प्राप्य समाः प्रबन्धान्
> शतं व्यधादप्पयदीक्षितेन्द्रः ॥

என்று, சிவலீலார்ணவ சுலோகத்தை விமர்சிக்கும்போது, இக்கருத்து வெளியாகிறது.

பரமேசுவரன் அனுதியான அவ்வளவு காலத்திலுமாய் 64 கலைகளைத் தான் இயற்றினார். தீக்ஷிதரோ ஸ்வல்பமான

72 வயதேயிருந்து நூறு நூல்களை இயற்றினர். என்று, பூத காலமானது மேற்கூறிய கருத்துக்குப் பொருந்தியுள்ளது. 100 என்பது உபலக்ஷணம் 101 என்றும் 108 என்றும் கூறுகிறார்கள். ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் ஆனந்தஸாகர ஸ்தவத்தில்,

त्वय्यर्पितं प्रथममप्पययज्वनैव
स्वात्मार्पणं विदधता स्वकुलं समस्तम् ।
का त्वं महेशि कुलदासमुपेक्षितुं मां
कोवाऽनुपासितुमहं कुलदेवतां त्वाम् ॥

ஏ பரமேசுவரியே! ஆத்மார்ப்பணத்தை இயற்றின அப்பைய தீக்ஷிதராலே ஸமஸ்தமான தன் குலமும் உன்னிடத்தில் முன்னமேயே அர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறிருக்க, குலதாஸனை என்னை யுபேக்ஷிக்க நீ எப்படி வல்லவளாவாய். குலதேவதையான உன்னை நான்தான் உபாஸிக்காமலிருக்க எவ்வாறு முடியும். என்று.

त्वय्यर्पितं प्रथममप्पययज्वनैव ।

என்றதால் இந்நூல் இயற்றப்படும்போது அப்பைய தீக்ஷிதர் பேருலகம் சென்றதாகத் தெரிகிறது.

மற்றும், சாஸ்திரங்களிலோ, ஸாஹித்யத்திலோ இம்மஹாநு அனேக நூல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. அவைகளில் 1நளசரித நாடகம், 2 கையட வியாக்யானம், 3 சிவதத்வரகஸ்யம் இவைகள்தான் தெரிகின்றன. இம்மஹானுடைய 3-வது குமாரரான கிர்வாணேந்திரர் தம்மாலாக்கப்பட்ட சிருங்கார திலகபாணத்திலும், இம்மஹானுடைய ஸகோதரரான, அதிராத்ரயஜ்வாவால் தமது 'குசகுமுத்வதீயம்' என்ற நாடகத்திலும், இந்நூல்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இம்மஹான் மதுரைமாநகரில் அரசாண்ட திருமலைநாயக மஹாராஜனுடைய ஸபையில், பண்டிதமணியாயும், மந்திரித்

தலைவராயும் இருந்தார். இவருக்கு அய்யாதீக்ஷிதரென்றும், வியவகாரமுண்டு. நம்நாட்டினர், பிதாமஹரின் பேராலேயே பௌத்திரனைக் கூப்பிடுவது வெகுவாய் வழக்கம். அதிலும் பெரியோரின் பெயரை நேராகச்சொல்வது மரியாதையல்ல வென்று கொஞ்சம் மாற்றிச்சொல்வது வழக்கம். இத்தகைய காரணத்தால் தீக்ஷிதர் வம்சத்தில் இவ்விதமான நாமக்ரமமானது ஏற்பட்டது.

முதலில் அச்சார்ய தீக்ஷிதர், அவரது பௌத்திரர் ஆச்சா தீக்ஷிதர். அவரது பௌத்திரர் அய்யா தீக்ஷிதர். திருமலை நாயகரும் தீக்ஷிதரின் அபிப்பிராயத்திற் கிணங்கியே, ஹாலாஸ்யநாதருக்கு ஸமஸ்த உத்ஸவத்தையும் நடத்தினர். தீக்ஷிதரும் சாஸ்திரங்களை நன்கு ஆராய்ச்சிசெய்து, அதன்படியே ஸமஸ்த உத்ஸவங்களையும் நடத்திவைத்தார். தவிரவும், ஹாலாஸ்யநாதருடைய லீலைகளை, சிவலீலார்ணவம் என்ற காவ்யத்தால் அவ்வாறே, வெளியிட்டிருக்கிறார். இப்போதும் அவ்விதமே உத்ஸவங்கள் நடைபெற்றுவருகின்றன.

மதுரைத் தமிழ்ப்பண்டிதர், மு. கோவிந்தசாமி ஐயரவர்களால் இயற்றப்பட்ட திருமலைநாயக்கர் சரித்திரத்தில் ஸ்ரீ ?ல கண்ட தீக்ஷிதரின் வரலாறும் கூறப்பட்டிருக்கிறது. அதை இவ்விடத்தில் குறிப்பிடுவோம்.

திருமலைநாயக்கர் கி. பி. 1628 மேல் அக்ஷயவருஷ வைகாசி மாதம் 10உ பூர்வபக்ஷத்தில் மூகூர்த்தம் வைத்து, மண்டபம் கட்டுவதற்கு ஆரம்பித்தார். அழகிய அப்புதுமண்டபத்தை முடித்த ஆசாரியின் பெயர் சுமந்திரமூர்த்தி ஆசாரி. இந்த ஆசாரி சிற்பசாஸ்திரத்தில் அதிநிபுணன். மிகுந்த சிவபக்தி உடையவன். அவன் முதலில் ஒரு பெரிய தூணில் ஏகபாத மூர்த்தி சொரூபம் வகுத்து, அதை ஸ்தாபனம்பண்ண ஒரு நல்லதினம் வைத்திருந்தான். அவ்வுருவத்தை இப்பொழுது புதுமண்டபத்தின் கிழக்கு வரிசையில், தெற்குக்கோடிக்காவி

பார்க்கலாம். ஏகபாதமூர்த்தி யென்பது "ஒரு காலுடன் பரம சிவனிருக்க அவனிடத்தில், 'பிர்மா ஒரு புறமும், விஷ்ணு ஒரு புறமுமுண்டானுர்கள்' என்று தெரிவிக்கும் ஒரு முகூர்த்தம். அவ்வுருவத்தை வைணவர்கள் கண்டு, அதனுல் காத்தற்கடவுளாகிய விஷ்ணுவுக்குப் பரத்துவங்குறையும் என்றெண்ணி 'அக்காலை நாட்டக்கூடாது' என்று ஆக்ஷேபித்து நாயக்கரிடம் கேட்டுக்கொண்டார்கள். நாயக்கர்கேட்டு, இவ்வியவகாரத்தை முடிவுசெய்துகொண்டே அக்காலை நடவேண்டுமென நிறுத்திவைத்தார். சைவர்களுக்கு மகாசிலரும், நான்கு வேதம், ஆறு சாஸ்திரங்களில் அதிநிபுண பண்டிதரும் சிவபூஜா துரந்தரருமான நீலகண்ட தீக்ஷிதரை வாதாடும்படி நியமித்தார். வைணவர்களுக்காக அவ்வாறே வேதசாஸ்திர நிபுண பண்டிதரும், வைணவபூஜா துரந்தரருமாகிய அய்யா தீக்ஷிதரை நியமித்தார். வாதம் ஆறுமாதகாலம் நடந்தது. ஒருவருக்கொருவர் வெற்றி தோல்வி என்று நிச்சயிப்பதற்கிடமில்லாமலே இருந்தது. இருவரும் தத்தமக்குரிய ஆதாரங்களை எடுத்துக்காட்டிச் சாதித்தனர். ஆயினும் முடிவில் இவருள் நீலகண்டதீக்ஷிதரே இதற்கு வேண்டிய பிரமாணங்களைக்காட்டி நிரூபித்து, அம்மூர்த்தியுண்டெனத் தாபித்தார்" என்று 'டெயிலர் பாதிரியார்' பதிப்பித்துள்ள கையெழுத்துப் பிரதியிலும், நெல்ஸன் துரையவர்கள் மானுபவலிலும், கண்டிருக்கிறது. இந்த வாதத்தைக் கேட்டுத் தெளிந்த திருமலைநாயக்கர் 'உலகமுழுதும் பரவிவருகின்ற பலவேறு சமயங்கள் தோறும் நாமபேதமொன்றன்றி வஸ்துபேதமன்று' என்பது யாம் நன்குணர்ந்து, எம்மதத்திலும் சம்மதப்பட்டுள்ளோமாயினும் முறைப்படி யாம் அரசாண்டு வருகிற இம்மதுரையம்பதி புண்யம்பெற்ற சிவக்ஷேத்திரங்களில் தலைசிறந்த ஒன்றுதலாலும், யாம் ஒரு வைணவனுய்ப் பிறந்துளோமாயினும், இப்பதியின்கண் எழுந்தருளியிருக்கிற சோமசுந்தரக் கடவுளே, கனவில் எமக்குத் தரிசனந்தந்து விபூதியளித்து, எமது பிணியைத் தீர்த்துளாராதலாலும், இங்கு எடுத்துக்கொண்ட இத்திருப்பணி சிவாலயத் திருப்பணியே யாதலாலும் இங்கு இந்த ஏகபாதமூர்த்தி சொரூபத்தை ஸ்தாபனம் பண்

ணவேண்டியது கடமைதான் எனத் தீர்மானித்தார். பின்னர் அதன்படியே அம்மூர்த்திசொரூபம் நாட்டப்பெற்றது. அதன் பிறகு வேலைகள் மிகத்துரிதமாய் நடந்து கி.பி. 1635ஞு மேமீ ஸ்ரீமுகஞு வைகாசிமீ கட்டி முடிவுபெற்றது. அக்கட்டிடத்தின் சிறப்பை இங்கு எடுத்துக்கூற ஸாத்யமாகாது. பார்த்தவர்களுக்குத்தான் அதன் மேன்மை விளங்கும். அம்மண்டபம் 105 அடி நீளமும் 33 கஜ அகலமும் உள்ளது. அம்மண்டபத்தில் 124 கால்கள் விடப்பட்டுக் கல்லால் மேல்தளமும் மூடப்பெற்றிருக்கிறது. இரண்டு உள்வரிசைக் கால்களில் நாயக்கருடையவும், அவர் முன்னோர் ஒன்பதின்மருடையவும் உருவச் சிலைகள் செய்யப்பெற்றுள்ளன.

நாயக்கருடைய உருவச்சிலையின் கால் அடிக்கும்பொழுது அதில் அவருடைய பத்தினிமாரிற் சிலருடைய உருவச்சிலையும் சேர்த்தமைத்தனர். அவருடைய பட்டமகிஷியாரின் உருவத்தைச் செதுக்கும்பொழுது சுமந்திரமூர்த்தியாசாரிஎவ்வளவோ சமர்த்தனுயிருந்துங்கூட அவனை யறியாது அவ்வம்மையாரது பெருந்தொடையில் ஒருசல்லி தெறித்துவிழுந்து ஊனமுண்டாயிற்று. ஆசாரி மிகவும் வருத்தமுற்று, அவ்வுருவத்தை இரண்டாமுறை அவன் எவ்வளவோ கவனம்வைத்து, அடித்தும் அது அப்படியே விழக்கண்டு, அதனை அதுசமயம் அங்குவந்திருந்த நீலகண்ட தீக்ஷிதருக்குத் தெரிவித்தான். அவர் "அது அப்படித்தான் இருக்கும், நீ அதை அப்படியே விட்டுவிடு" என்று கூறினர். அவன் அவ்வாறே விட்டுவிட்டான். நாயக்கர் மறுநாள் அவ்வுருவைப் பார்க்கும்பொழுது, "அஃதேன் அப்படி ஊனமாயிருக்கின்றது" எனக்கேட்க சுமந்திரஆசாரி, நடந்த விருத்தாந்தத்தையும், நீலகண்ட தீக்ஷிதர் உத்தரவையும் கூறினன். நாயக்கருக்கு உடனே தீக்ஷிதரிடத்திற் சந்தேகமுண்டாயிற்று. தமது பத்தினியாருடைய பெருந்தொடையிலிருக்கும் தழும்பை இவரெவ்வாறு உணர்ந்தாரென அவர் நடத்தை விஷயத்தில் அனியாயமாய்ச் சந்தேகப்பட்டு, 'அவர் கண்ணைப்